[2nd February 1966

Evasion of stamp duty

*56 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to check evasion of stamp duty on transfers of properties by under-valuation of the properties?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

திரு. மீ. கலியாணசுந்தரம்: *அவற்றுக்கு விதிகள் பிறப்பிக்கப் பட்டுவிட்டனவா? அப்படியானால், எந்த முறையில் கண்டு அறிவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?*

கனம் திரு. வெ. ராமையா: *இன்னும் விதிகள் போட்டு அமல் செய்யக்கூடிய நிலையில் இல்லை. பல ஆலோசனைகள் இருந்து கொண்டிருக்கின்றன.*

திரு. மீ. கலியாணசுந்தரம்: *இதை எந்தத் துறையினரிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்பதை அறியலாமா?*

கனம் திரு. வெ. ராமையா: *யார் செய்வது, எந்த முறையில் இதை அமல் நடத்துவது எந்தத் துறையில் விடுவது என்கிற விவரங்கள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.*

கோமுகி நீர்த்தேக்கத் திட்டம்

*57 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) கோமுகி நீர்த்தேக்கத் திட்ட வேலைகளுக்கென அங்கு வைக்கப்பட்டிருந்த சிமெண்ட் மூட்டைகள் 1964-ல் சுமார் 700 மூட்டைகள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டது என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) There was no loss of cement bags due to floods at Gomukhinadhi Project during 1964. But due to unexpected heavy rains in the Gomukhinadhi Project Dam area on the night of 7th December 1963 floods in the river rose to peak level at 11-00 p.m. and entered the store shed where cement was stocked. Three hundred and ninety-two bags of cement were damaged and their value, viz., Rs. 3,024-09 was written off by the Chief Engineer (Irrigation), as the loss was due to natural calamities.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: *தலைவர் அவர்களே, இந்த மூட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கும்போது, அங்கேயிருந்தவர்கள் 'இங்கே மூட்டைகளை வைக்காதீர்கள், திடீரென்று மழை*